**செ. கு. எண்: 015** **நாள்: 29.01.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை – 29.1.2019</u>

திருநெல்வேலி மாவட்டம், **மணிமுத்தாறு அணை**, மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 1, 2, 3 மற்றும் 4ஆவது ரீச் மறைமுகப் பாசன ஆயக்கட்டுதாரர்கள் மணிமுத்தாறு அணையில் 80 அடி வரையிலான மீதமுள்ள நீரை ஏற்கனவே பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு அறுவடை காலம் வரை பாசன குளங்களுக்கு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். மணிமுத்தாறு பிரதான கால்வாயில் 1, 2, 3 மற்றும் 4 ஆவது ரீச் கீழ் உள்ள 22,852 ஏக்கர் மறைமுகப் பாசனப் பகுதிகளில் நிலவும் கடும் வறண்ட சூழ்நிலையையும், அறுவடைக் காலம் வரை தண்ணீர் வழங்க வேண்டியுள்ளதையும் கருத்தில்கொண்டு **01.02.2019 முதல் 20.02.2019 வரை** மணிமுத்தாறு பிரதானக் கால்வாயின் 1,2,3 மற்றும் 4ஆவது ரீச் பகுதிகளுக்கு 800 மி.க.அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், மணிமுத்தாறு அணையிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, நாங்குநேரி, ராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திசையன்விளை திருவைகுண்டம், திருச்செந்தூர், ஏரல் மற்றும் சாத்தான்குளம் ஆகிய வட்டங்களில் உள்ள **22,852 ஏக்கர்** நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், விவசாயப் பெருமக்கள் நீரை சிக்கனமாக பயன்படுத்தி, நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**